2. பேரவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இன்று மன்றத்தில், கேள்வி நேரத்தின்போது திரு. கிட்டப்பா அவர்கள் தாம் 30 நிமிடமாக கையைத் தூக்கிக்கொண்டிருந்ததாகவும், நான் அவரைக் கவனித்து அழைக்கவில்லை என்றும் சொல்லி வெளிநடப்புச் செய்தார்.

நேற்றும் இன்றும் கேள்வி நேரம் $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு நடைபெற்றது. நேற்று 20 கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பெற்றன. இன்றும் 20 கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பெற்றன. இதில் இரண்டு கேள்விகள் அமைச்சர் இல்லாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பெற்றுள்ளன.

திரு. கிட்டப்பா அவர்கள் முதலில் கையைத் தூக்கியதை நான் கவனிக்காமலில்லை என்றாலும், கேள்விகளுக்கு ஒதுக்கப் பெற்றுள்ள கால அளவில்தான் நான் ஒரு ஒழுங்கோடு துணைக் கேள்விகள், அதற்கான பதில்கள் கேட்பதற்கும், விடையளிப்பதற்கும் வாய்ப்பளித்தாக வேண்டும். எல்லாக் கட்சிகளுக்கும் சம வாய்ப்புக் கொடுக்க வேண்டும். பேரவையில் எதிர்க்கட்சி வரிசையிலும், ஆளும் கட்சி வரிசையிலும் கடைசியில் உள்ளவர்களைக் கூட கவனித்துதான் ஒரு ஒழுங்கோடு வாய்ப்பளிக்கிறேன்.

பாராளுமன்றத்தில் கூட நாங்கள் எட்டுபேர்கள் இருந்தபோது வாய்ப்புப்பெற முடியாது மிகவும் கஷ்டப்பட்டோம். எதிர்க்கட்சிகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் வாய்ப்பே கிடைக்காமல் போயிருக்கிறது. இன்று திருவாளர்கள் திருவேங்கடம், சொக்கலிங்கம் போன்றவர்களுக்கு எல்லாம் துணைக்கேள்விகள் கேட்க வாய்ப்பு அளித்தேன். தவிர நேற்றுக்கூட கேள்வி நேரத்தின்போது திரு. கிட்டப்பா அவர்களுக்கு 3 கேள்விகள் கேட்கவும் விடைகளைப் பெறவும் வாய்ப்பு அளிக்கப் பெற்றுள்ளது. இன்றைக்கு அவரது உடல் நலம் சரியில்லையோ ன்னவோ சற்று கோபம் கொண்டு வெளிநடப்புச் செய்து விட்டார். இன்றைக்குக் கேள்வி நேரம் $1\frac{1}{2}$ மணி நேர அளவிற்கு நடந்திருக்கிறது. அதிக அளவில் உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்த அளவிற்குப் பேரவை நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்திக் கொண்டு போவதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறோம். கட்சித்தலைவர்களும் தயவுசெய்து தங்கள் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்து முடிந்த அளவிற்கு பேரவையை நல்ல முறையில் நடத்திச்செல்ல பேரவைத் தலைவருக்கு ஒத்துழைப்புத் தரும்படி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1981 ஜனவரி 24

நான் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கேள்வி கேட்க வாய்ப்பில்லாதவர்களுக்கு இப்போது வாய்ப்பளிக்க வேண்டியிருக்கிறது. எனவே தயவு செய்து வயது முதிர்ந்த உறுப்பினர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

4. தகவல் கோரல

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. ப. பொன்னுரங்கம் : நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைமீதான விவாதத்தின் போது பலவற்றையும் எடுத்துப்பேச வாய்ப்பு உள்ளது ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது சில முக்கியமான தீர்மானங்களாக இருந்தாலன்றி எடுத்துக்கொள்வது மரபு அல்ல. திரு. பொன்னுரங்கம் தயவு செய்து ஒத்துழைக்கவேண்டும்.

[முற்பகல் 10-20]

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற கட்சி சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தைக் கூட்டச் சொன்னால் அமளிதுமளி ஏற்படுத்துவார், என்னிடத்தில் பிரச்னைகளைச் சொல்லலாம், சட்டமன்றத்தைக் கூட்டவேண்டிய அவசியமில்லை, என்றெல்லாம் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசினார்கள். ஆனால் இன்று மனம் திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு மனம் திறந்து என்னுடைய நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். இந்த அரசினுடைய திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆளுநர் உரை அப்படி இருக்கிறதா என்று கேட்டால் அமாவாசையில் வெண்ணிலவு இல்லாமலிருப்பது போல், அத்தி மரம் பூக்காதிருப்பது போல், ஆடிக்காற்றில் தென்றல் சுகம் இல்லாதது போல் இந்த ஆளுநர் உரை கொள்கைகள் இல்லாத, திட்டங்கள் இல்லாத உரையாகத்தான் இருக்கிறது என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.